பாம்பன் ஸ்வாமிகள் பாதமலர்கள் போற்றி

# சண்முக கவசம்

ஆன்மிகப் பல்சுவைத் திங்களிதழ்

ஜனவரி 2014 • விலை ரூ. 15/-



# முத்துத் தமிழில் பத்துப் பிரபந்தம்

மனிதனாகப் பிறந்த நமக்கு இறைவன் கொடுத்த மிகப் பெரும் செல்வம் பேசும் தன்மை. நாம் பல மொழிகளில் பேசினாலும், தமிழ் நம் உயிர் மூச்சு. நம்முடைய முன்னோர்களாகிய ஔவையார், திருவள்ளுவர், பாரதியார் போன்ற மிகப்பெரும் சான்றோர்கள் தமிழில் பல உண்மைகளைக் கூறியிருக்கின்றனர். ஆன்மிகத்தில் திருமூலர், பட்டினத்தார், சிதம்பர சுவாமிகள், குமரகுருபரர், நால்வர் பெருமக்கள் போன்ற பலர் இறைவன் மீது பல பாடல்கள் இயற்றியிருந்தாலும், தமிழ் மக்களுக்கும், தமிழ் நாட்டுக்கும் கிடைத்த ஒரு மிகப்பெரும் ஞானிதான் நம் குருநாதர் அத்தியாச்சிரம சுத்தாத்துவித வைதிக சைவ சித்தாந்த ஞானபானு பாம்பன் ஸ்ரீமத் குமர குருதாச சுவாமிகள் ஆவார்.

சுவாமிகள் தமிழ் மொழியிலும், வடமொழியிலும் நன்கு பயின்றவர். நாம் என்ன தான் படித்தாலும் நமக்கு இருக்கின்ற அறிவைப் பயன்படுத்துவதற்கு முருகப் பெருமானுடைய பரிபூரண அருள் இருந்தால் மட்டுமே நாம் நன்கு பயில முடியும். சுவாமிகள் முருகப் பெருமானின் அருள் பெற்றதால் நமக்கு பந்தங்கள் என்ற தலைப்பில் ஒரு மிகப் பெரும் தத்துவத்தையும், தமிழின் சிறப்புகளையும் நமக்கு எடுத்துரைத்துள்ளார்கள். இந்த பந்தங்கள் நாம் நலமாக வாழவும், நமக்கு முருகனுடைய அருள் கிடைக்கவும் மட்டுமே சுவாமிகள் இயற்றியுள்ளார்கள்.

தமிழ் மொழியில் நான்கு விதங்களில் கவிகளை இயற்ற முடியும். அவை முறையே 1. ஆசுகவி, 2.வித்தியாகவி, 3. சித்திரகவி, மற்றும் 4. வரகவி ஆகும். நம் முன்னோர்களாகிய ஆன்மிக வழியில் வந்த பெரியவர்களில் சிலரே சித்திரகவி மூலம் மகா மந்திரங்களை இயற்றியுள்ளார்கள். அதில் மிக முக்கியமான ஞானிதான் நம் குருநாதர் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் ஆவார். பாம்பன் என்னும் பதியில் தோன்றிய நம் குருநாதர் முருகனின் அருள் பெற்று 6666 பாடல்கள் நமக்குக் கொடுத்துவிட்டு நம்முடன் அருஉருவமாக வாழ்ந்து கொண்டு இருக்கிறார். சுவாமிகள் தேகம் பிரணவ தேகம். சுவாமிகள் சென்னை திருவான்மியூரில் ஜீவசமாதி அடைந்து நமக்கு அருள்பாலிக்கின்றார். சுவாமிகள் முருகப் பெருமானுடைய அருளை அடைவதற்கு நமக்காக முருகனிடம் ஒரு விண்ணப்பம் செய்கிறார். அதாவது, "என் பாட்டைப் பாடுபவர்களுக்கு நலம் நல்காய்" என்று வேண்டுகின்றார்.



சுவாமிகளுடைய வேண்டுகோளை முருகன் ஏற்றுக் கொண்டார். இதற்குச் சான்றாக அவருடைய வாழ்க்கையில் பல உண்மைகள் நடந்திருந்தாலும், திருச்செந்தூர் முருகன், ஒரு பாட்டியிடம், சுவாமிகள் அருளிய பஞ்சாமிர்த வண்ணம் பாடினால் நான் அங்கு இருப்பேன் என்று கூறியது மிகப் பெரிய சான்றாகும். முருகனே இவ்வாறு சுறியதால் சுவாமிகள் மோனை நயமுடைய பாடல்களும், இலக்கியப் பாடல்களும், இலக்கண முறைப்படியும், தமிழில் உள்ள சிறப்புகள் உள்ளடக்கிய பந்தங்கள் என்ற தலைப்பிலும் பாடல்களை இயற்றியுள்ளார்கள்.

சென்னைக்கு அருகில் வடக்கிலும் வடமேற்கிலுமாக உள்ள தலங்களுக்கும் சுவாமிகள் சென்று செவ்வேள் பரமனைத் தரிசனம் செய்து இன்புற்றார். பொன்னேரிக்கு அருகே உள்ள திருப்பாலைவனத்துக்குச் சென்று முருகப் பெருமானைத் தரிசித்த போது அவர் பாடிய பாடல்:-

**வேலை உடுத்த விபுலைவாழ் நர்க்கு விவேகநெறி**
**நூலை வகுத்ததன் நுட்பமும் காட்டியந் நோன்மைவழிக்**
**காலை அளித்தருள் முக்கண்ணன் நாளும்**
**கனிவொடுவாழ்**
**பாலை வனத்திற்குள் குமரனை நன்கு பணிகுதுமே**

சுவாமிகள் ஊர்கள் பலவற்றுக்கும் சென்றுவிட்டு சென்னைக்கு வந்தார்கள். சுவாமிகளின் தொடையிலும் அரையிலும் இரண்டு கட்டிகள் தோன்றித் துன்பம் விளைவித்தன. நடக்க இயலாமல் கஷ்டப்பட்டார். தமது பண்டைய வினைப்பயனே இவ்வாறு விளைந்தது என நினைந்து முருகனிடமே முறையிட்டுக் கொண்டார்.

**சடைக்கற்றை தாங்குவ்விச் சங்கர னார்தந்த**
**தங்கஅயில்**
**படைக்கை எந்தாய், அறியாமையில் நான்**
**செய்த பண்டைவினை**
**தொடைக்கட்டியோடு, அரைக் கட்டியுமா**
**நனிதோன்றி என்னை**
**நடக்கவொட்ட டாதுசெய் கின்றது சென்னை**
**நகர்தனிலே.**

எனும் கட்டளைக் கலித்துறையால் தமது கவலையை வெளிப்படுத்தினார். முருகப் பெருமான் ஒரு சிறு பிள்ளையாகத் தோன்றி, அந்தக் கட்டிகள் நைந்து கரைந்து போகுமாறு மருந்து பூசிச் சென்றான். இவ்வாறு தான் சுவாமிகளுக்கு மருந்து பூசிக் குணமாக்கியதை ஜகதாம்பாள் என்னும் ஒரு பெண்மணியின்

சிவத்தமிழ் குகமணி
**தெ.தனபால்**
ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சி ஆசிரியர்
Email : thiruppalli@yahoo.com Cell : 9444958526

கனவில் தோன்றியும் புலப்படுத்திவிட்டான். மறுநாள் கட்டிகள் உடைந்து கரைந்து போக, சுவாமிகளின் துன்பமும் நீங்கியது.

வேறொரு சமயம் காது நோயாலும், வைசூரி எனும் நோயாலும் சுவாமிகள் துன்புற நேர்ந்தது. இந்நோய்களெல்லாம் இறைவனின் தனிக்கருணையால் சுவாமிகளை விட்டு நீங்கின.

**வாசியானகால் ஊரு மீது கோள்**
**மருவு கட்டினரு வுறரு லற்புறை**
**பூசி நின்றவொர் பிள்ளையே இங்ஙன்**
**புரிவிலார்கள்போல் மறைவ தேதரோ**

**மற்றோர் காலைவெங் காது நோயினை**
**மருவி வாடினேன் உறுவை சூரியால்**
**அற்றம் எய்தினேன் அங்கும் உன்தயா**
**அணைந்தளித்ததே....**

என ஸ்ரீமத் குமாரசுவாமியத்தே இடையறாது நிற்க விழைதல் எனும் பதிகத்தில் சுவாமிகள் நன்றிப் பெருக்கோடு நினைவு கூர்ந்தார்.

தமிழிலும் வடமொழியிலும் சித்திர ரூபம் பொருந்துமாறு பாடல்களை யாக்கும் மரபு இருந்து வந்திருக்கிறது. பாட்டில் வரும் எழுத்துகளை முறையாகப் பொருத்திக் கொண்டே வந்தால், பாடப்பட்ட யாப்புக்கு ஏற்ப முரசு, தாமரை, வேல், சக்கரம், மயில் முதலான வடிவங்கள் அழகுபெற அமையும். இவ்வாறு பாடப்படும் பாடல்களே சித்திரக் கவிகள் எனப்படும். மிறைக்கவிகள் என்றும் அழைக்கப்படும். திருஞானசம்பந்தர் சித்திரக்கவிகளை உள்ளடக்கிய பதிகங்கள் பலவற்றை அருளியுள்ளார். பெருமான் பாடிய சித்திரப் பதிகங்கள் வித்தகத் தத்துவங்களையும் வெளிப்படுத்துவனவாக விளங்குவதால் சேக்கிழார் அவற்றை மூல இலக்கியங்கள் எனச் சிறப்பித்துக் கூறினார்.

இத்தகைய சித்திர விசித்திரக் கவிமரபு, வடமொழியில் இருந்தாலும் கூட, நம் தமிழ்மொழியில் அந்த மரபு வளமும் வகைகளும் கொண்டு காலம் தோறும் வளர்ச்சி பெற்று வந்துள்ளது போன்று, வடமொழியில் தழைக்கவில்லை.

அண்மைக் காலத்தே சித்திர - விசித்திரப் பாடல்களைச் செவ்வேள் பரமனையே பொருளாகக் கொண்டு அதிகமான அளவில் பாடியருளிய பெருந்தகை நம் சுவாமிகளே ஆவர். சுவாமிகள் பாடிய தசபங்கி, பஞ்சவிம்சதி, அதிக சதபங்கி முதலானவற்றைப் பற்றி முன்னரேயே கூறப்பட்டுள்ளது.

சுவாமிகள் அருள்வளமும் பொருள் வளமும் செறியப் பாடி அருளிய **பத்துப்பிரபந்தம்** என்பதைப் பற்றி இப்பொழுது காண்போம்.

1.சஸ்திர பந்தம்; 2.மயூர பந்தம்; 3.கமல பந்தம்; 4.பிறிதுபடு துவிதபங்கி; 5.பிறிதுபடு திரிபங்கி; 6.பிறிதுபடு பாட்டுப் பிரபந்தம்; 7.பகுபடு பஞ்சகம்; 8.சஷ்டி வகுப்பு; 9.தங்க ஆனந்தக் களிப்பு; 10.அனவரத பாராயணாஷ்டகம் ஆகியவை ஆகும்.

இவற்றுள் சஸ்திரபந்தம், மயூரபந்தம், கமலபந்தம், தங்க ஆனந்தக் களிப்பு ஆகியவற்றிற்குச் சுவாமிகளே விளக்கவுரை அருளியுள்ளார். சஸ்திரபந்தமாக அமையும் நேரிசை வெண்பாவில் 55 எழுத்துகள். ஆனால் வேல் எனும் சித்திரத்தில் பொருத்திப் பார்த்தால் 30 எழுத்துகளே வரும். மயூரபந்தமாக அமையும் அறுசீர் விருத்தத்தில் 100 எழுத்துகள், மயில் வடிவச் சித்திரத்தில் 64 எழுத்துகளாகக் குறைந்துவிடும்.

**ஸ்ரீமத் பாம்பன் குமரகுருதாஸ சுவாமிகள்**
**அருளிய சித்திர விசித்திரகவி கொண்ட**




இந்த சஸ்திர பந்தத்தைப் படித்தால், தொழில், கல்வி, செல்வம் மற்றும் வாழ்க்கையில் மேம்பட முடியும் என்பது அடியேனின் கருத்து. இந்த சஸ்திர பந்தம் கொண்டுள்ள மூல மந்திரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

வாலவே தாந்தபா வாசம்போ கத்தன்பா
மலைபூ ணேமதிற மால்வலர்தே – சாலவ
மாபாசம் போக மதிதேசார் மாபூதம்
வாபாதந் தாவேல வா.



**ரதபந்தம்**

இருள் பொருதா வம்பலசித் தென்னுமுரு காநீ
டிருவிண்ணோர் தேடுமருந் தேமாண் – பொருவாச்சீர்
தேசுதருஞ் செந்திநறுந் தீர்த்தவிற லோங்குசிதா
வாசிறந்த மாவின் பருள்.

மேலும் 8 பந்தங்கள்

**தமருகபந்தம்**

வேலா வீயா வீராகோ
கோலா கோதே றாராமா
மாலா வேனை மாமாகா
காலா ளாதே காகாவே

**துவித நாகபந்தம்**
வாளா ரநாதி மயிலே றுஞ் சுந்தர மேயமகா
வேளா மயிலோய் விமலர்கண் வந்த சமாதியர்கோ
வாளா யெனுநாவுள் ளார்நா ரருந்தெங்க ளாரியற்கே
யாளாகி வாழ்வது மாணப் பெரிதெனு மாகமமே.

**மயூர பந்தம்**
வரதந திபநக ரசுமுக வொருகுக வறிதுத புவிரிவிதி
மரகத வரிபர மதுகளி லசலவி மலமழ வெனலிரிய
மரபுறு குறுமுனி வருதிம யலசம மதிவிரி விபுதகுரு
சுரபதி நவரச பரததி நகரம துகமழ முனிவருதி

**கமலபந்தம்**
வரவிதி திருவ வருதிபொ னரவ
வரனது கருவ வருகணை குரவ
வரகுக மருவ வருமறை பரவ
வரபத மருவ வருமதி விரவ.

**கமல பந்தம்**
படித்தால் நடுவிலொரு வகரமும். சூட்டின்மேல் நான்கு வகரமுஞ் சந்தியாய் நின்று முற்றுப்பெறு நான்காரைச் சக்கரபந்தமாம், அடியிற் காண்க,
மேலைய தலைச் செய்யுளின் முதலடி யீற்றெழுத்துத் தொடங்கி மற்றை மூன்றடிகளிலும். முதலடியிலுள்ள வெழுத்துகளில் ஒவ்வோ ரெழுத்து இடையிட்டு வாசிக்க. ஒரு காதை கரப்புச் செய்யுள் வரும், அது வருமாறு:-

**காதைகரப்பு**
வஞ்சித்துறை யமகம்
வரதுரு வகநு
வரகரு வமப
வரதரு வமவி
வரவிரு வதின,
சொற்பிரிவு:- வர. துருவ. ககுவர். அகருவம். அபவர், அதர்.உ. வம்.அவி. வர.திருவ.தின,
(இதன் பொருள்) ககுவர் = திசைகளிலுள்ள ஜீவர்களுக்கு. வர =வரமளிக்கும் வள்ளலே.
துருவ = மலைகளையுடையானே. அகருவம் = அன்பில்லாமையையும். அபவர் அதர் = உள்ளதைப் பற்றாதவரது வழிச்செல்லும். உ = மனத்தின். விம் = விருப்பத்தையும். அவி = (என்னிடஞ் சேராத வண்ணம்) கெடுத்தருள். வர = (என்) விருப்பத்திற்குரியவனே

**நான்கரை சக்கரபந்தம்**
வருதிபொ னரவ வரனது கருவ
வருகணை குரவ வரகுக மருவ
வருமறை பரவ வரபத மருவ
வருமதி விரவ வரவிதி திருவ,

மேற்கண்ட பாடல்கள் படிப்பது மிகவும் கடினம்தான். தமிழ் கற்று அறிந்த சான்றோர்களும் புரிந்து கொள்வது சிறிது கடினம் என்றாலும், இதனால் நாம் அடைகின்ற பலன் இமயமலையைவிடப் பெரியது. இதுகுறித்து மேலும் விவரம் வேண்டும் மெய்யன்பர்கள் www.pambanswamigal.org என்ற இணையதளத்தில் சென்று தெரிந்து கொள்ளலாம்.

நான் இயற்றிய ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சியில் 36ஆம் பாடலில் பாடல் எழுதக் கூடிய அருள் சுவாமிகள் மூலம் கிடைத்தது. அதில் இப்பாடல்கள் பாடுபவர்களுக்கு ஒரு தாழ்வில்லை என்று கூறியிருப்பது மெய்யடியார்கள் காணவேண்டியது ஒன்று. அது மட்டும் அல்லாமல் 37 ஆம் பாடலில் சுவாமிகள் இயற்றிய தங்க ஆனந்தக் களிப்பை சுவாமிகள் பாடும் போது அங்கு வந்து இருந்த அடியார் ஒருவர் அவர் வைத்திருந்த ருத்திராக்ஷத்தை சுவாமிகள் கழுத்தில் போட்டு இதுபோன்ற பாடல்கள் முருகனின் அருள் இருந்தால்தான் கிடைக்கும் என்று அங்கு இருந்தவர்களிடம் கூறி அகம் மகிழ்ந்தார். மேலும் 38ஆவது பாடலில் சித்திரகவிகளினருமை என்ற தலைப்பில் கூறும்போது சித்திரகவிகளின் மூலம் மந்திர சொற்கட்டுகளை உருவாக்கி அடியார்களுக்கு அளித்த சித்தாந்தச் செல்வரே சீக்கிரம் அருள்புரிய பள்ளி எழுந்தருள்வீராக! என்றும் என்னால் எழுதப்பட்டிருப்பதை தங்களுக்குக் கூற இக்கட்டுரை மிகவும் பயன் உள்ளதாக அமைந்துள்ளது.

**இக்கட்டுரையின் முக்கிய நோக்கம்:-**


நம் தமிழ் மொழியில் உள்ள இலக்கணம், மாத்திரையின் அளவுகள் பற்றி நாம் தெரிந்து கொள்ளாமல் இருக்கிறோம். இனியாவது நம் தாய் மொழி மீது பற்று வைத்து ஞானிகள் இயற்றிய பாடல்களைப் படித்து நம் வாழ்வில் ஒரு துன்பமும் வராமல் காத்துக் கொள்ள வேண்டும் என்பதே என்னுடைய எண்ணமாகும்.


## ஆன்மிகப் பாதையில் செல்லும் சண்முக கவசம் படிக்கும் நேயர்களுக்கு ஒரு புதிய நற்செய்தி

சண்முக கவசம் இதழில் வரும் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் செய்திகள் தாங்கள் எப்போது வேண்டுமானாலும் படித்துக் கொள்ள இன்றைய விஞ்ஞானத் துறையில் மிகப் பெரிய வசதியை நாம் பெற்றுள்ளதால் இனிமேல் தாங்கள் கீழ்வரும் இணைய தளத்தில் படித்துத் தெரிந்துகொள்ள நமது குழுக்களில் உள்ள ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சி மன்றம் இதைச் செய்ய முன் வந்துள்ளது என்பதை நாங்கள் தங்களுக்கு தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம். அந்த இணைய தளத்தின் பெயர் பின்வருமாறு :

**www.pambanswamigal.net or www.pambanswamigal.org**

மேலும் விவரங்களுக்கு : **Email: thiruppalli@yahoo.com or 94449 58526**



# சண்முக கவசம் தரும் பெருமபயன்

சண்முகம், கவசம் இரண்டுமே வடமொழிச்சொற்கள். இவை இரண்டும் இணைந்த பாராயணப் பாடல் பகுதி மிக நன்று. சண்முகம் என்றால் ஆறுமுகங்கள். கவசம் என்றால் காப்பு.

கவசங்களில் சில: திருநீறு, குங்குமம், சந்தனம் இவை நம்மைக் காக்கும். இது ஓர் இரும்புப் போர்வை போன்றது. வலிமையான பாதுகாப்பு வளையம். கவசநூல்கள் என்பன மந்திரங்களின் தொகுப்பு. இதை நம்பிக்கையுடன் மனமுருக இசைத்தால், இறைவன் நமக்கு இசைவான், இணங்குவான் இணக்கம் அறிந்து.

கவசத்தின் பொருளை உணர்ந்து ஓதுதல் சிறப்பு. பொருள் உணராமல் வாசித்தாலும் பயனுண்டு. ஆனால் கவனச் சிதறலுடன் பாராயணம் செய்தால் பயனில்லை. ஒரு நாளில் ஒரு வேளையாவது கவசத்தைப் படித்தல் நன்று. வழிபட்டால் அதைவிட நன்று. உண்மை.

இன்றைக்கு 121 ஆண்டுகளுக்கு முன்பு, கர வருடம் கார்த்திகை மாதம் 8 ஆம் நாள் ஞாயிற்றுக் கிழமையன்று பாம்பன் சுவாமிகள் சண்முக கவசம் பாடல்களை இயற்றினார். நான் இன்று கார்த்திகை மாதம் 18 ஆம் நாள் (4.12.2013) புதன்கிழமையன்று இதைப் பற்றிய ஒரு குறுந்தகவலை – அருந்தகவலை வாசகர்களுக்கு எழுதுகிறேன். ( சான்று: மறைந்த தமிழ்ப் பேராசிரியர் பொன்னேரி முனைவர் டி.செல்வராஜ் எழுதிய சண்முககவசம் தெளிவுரை.)

இந்நூலில் இதுவரை நாம் அறியாத ஒரு புதிய நிகழ்ச்சியை நூலாசிரியர் செல்வராஜ் அழகாகக் குறிப்பிடுகிறார்.

ஒருமுறை இராமனுக்கும் அனுமனுக்கும் முரண்பாடு ஏற்பட்டு விட்டதாம். அதுவும் அனுமனின் மீது பாணங்களை ஏவித் தாக்கும் வரைக்கும். அனுமனோ அமைதியாய் ஓரிடத்தில் அப்படியே அமர்ந்துவிட்டாராம். 'இராம' மந்திரம் ஒரு கவச வளையத்தை உருவாக்கிவிட்டது. அதை ஊடுருவி அனுமனைத் தாக்க இராமரின் விற்கணைகளால் இயலவில்லை. மாறாக அனுமனைக் காத்து நின்றன. உண்மையில் இராமபாணம் மிக ஆற்றலுடையதே, ஆயினும் இராமநாமம் அதைவிடப் பேராற்றல் கொண்டது. இந்த இராம நாமம் ஒரு மந்திரம் – கவசம் – காப்பு.

அதைப்போலவே முருகரை உள்நிறுத்திப் பாடும் சண்முக கவசமும் நம்மைப் பல துயர்களிலிருந்து காக்கும் என்று நூலாசிரியர் ஓர் ஒப்பற்ற உவமையான மேற்கண்ட நிகழ்ச்சியைக் குறிப்பிட்டு எழுதியிருந்ததை நான் படித்தபோது மெய் சிலிர்த்தேன். இதுவரை நாம் அறியாத இச்செய்தி புதியதுதானே? சொல் புதிது. பொருள் புதிது.

மேலும் நூலாசிரியர் டி.செல்வராஜ் என்னுரை பகுதியில் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்:


சோழவரம் அரிமா மு.முரளீதரன்
செல்: 9894651480


திருமுருகனைப் போற்றிப் பரவும் பல கவசங்களில் சிறப்புக்குரியவை இரண்டு.

1.தேவராய சுவாமிகள் இயற்றிய கந்தர் சஷ்டி கவசம்.

2.பாம்பன் சுவாமிகள் இயற்றிய சண்முக கவசம்.

முன்னது மிக எளிமையானது. நல்ல இசையமைப்பில் சூலமங்கலம் சகோதரிகள் அற்புத இன்னிசையால் எளிதில் பக்தர்களால் பாடப்படும் கந்த சஷ்டி கவசம் பிரபலமானது. சண்முககவசமும் உரிய நேரத்தில் உரியவர்களால் மிகப் பிரபலமாகத் திகழும் – அதுவும் விரைவில், என்று நாம் எதிர்பார்ப்போம். பலனை எதிர்பார்த்துப் பாராயணம் செய்வது பக்தர்களின் வழிபாட்டு முறையன்று. ஆனால் பலனும் கிடைக்கும் என்று வழிபடுவதும் ஓர் எதிர்பார்ப்பு. இதைத் தவறென்றும் கூற இயலாது. பயன் பெற்றவர்கள் அதைத் தொடர்கிறார்கள் என்பதே அப்பாராயணத்தின் கூடுதல் சிறப்பாகும். பலன் பெற்றவர்களின் கூற்று நிஜமாகும்.

## பெருமாளைக் காக்கும் பைரவர்

சிவன் கோயில்களில் பைரவர் காவல் தெய்வமாக இருப்பது வழக்கம். இந்த பைரவர் சிவபெருமானின் அம்சமாவார். இந்த நிலையில் வள்ளியூர் அருகில் உள்ள திருக்குறுங்குடி என்னும் ஊரில் 108 திவ்ய தேசங்களில் ஒன்றான நம்பி பெருமாள் கோயில் உள்ளது. இங்கு சிவனின் அம்சமான கால பைரவர் இருந்து பெருமாளுக்குக் காவல் புரிந்து வருகிறார். இதனால் இக்கோயில் சைவ-வைணவ ஒற்றுமைக்கு சிறப்பு பெற்ற தலமாக விளங்குகிறது.

**– அ.க.ராதாகிருஷ்ணன்,**
அல்லி நகரம்

'சஷ்டியை நோக்கச் சரவணபவனார்' என்று தொடங்கும் கந்த சஷ்டி கவசம் பாடலைப் பாடினாலும் 'அண்டமாய், அவனியாகி, அறியொணாப் பொருளதாகி' என்று தொடங்கும் சண்முக கவசப் பாடலைப் பாடினாலும் இரண்டும் முருகனை வழிபட்டு வளம் வேண்டிப் பாடுவனவேயாகும். இரண்டில் ஒன்றேனும் பாடினால் நன்று. ( ஏதேனும் ஒரு பொழுதாகிலும்.) சண்முக கவசம் எல்லாரும் எளிதில் படித்துத் தெரிந்துகொள்ளக் கூடிய எளிய நூலன்று. சற்றே கடுமையான நடையுடையது; பொருளோட்டமுடையது என்கிறார், நூலாசிரியர் திரு.டி.செல்வராஜ்; நன்கு ஆய்வுரை செய்தவர்.

கந்த சஷ்டி கவசம் நுங்கு என்றால் சண்முக கவசம் இளநீர் வழுக்கை எனலாம். இவை இரண்டுமே இனிக்கும். அதைப் பெற நாம் பொறுமையுடன் காத்திருக்கவேண்டும். இது என் எண்ணம். காத்திருப்பது சுமையல்ல; சுகமே. சண்முக கவசத்தைப் பற்றி நூலாசிரியர் குறிப்பிட்டிருக்கும் மிகச் சிறப்பான பகுதியை இனி, காண்போம்.

"முதலில் முருகனை 'என்னருள் ஈசன்' என்று சுவாமிகள் போற்றுகிறார். முடிவில் தம்மைத் தாசன் என்று குறித்துப் பெருமிதமடைகிறார்.

'சரவண பவன்' என்ற ஆறெழுத்து மந்திரத்தைக் கவசத்தின் முதலிலும், முடிவிலும் பதிக்கிறார். இவ்வாறு பதித்ததால் இக்கவச நூலைப் புனைய இம்மந்திரமே ஊடுநூலாகப் பயன்படுகிறது என்பது தெளிவாகத் தெரிகிறது.

**அருணகிரிநாதர்:** சுவாமிகள் அருணகிரி நாதரைத் தம் மேலான குருவாக ஏற்றார். எனவே, தாம் இயற்றும் ஒவ்வொரு நூலின் இறுதிப்பாடலில் அருணகிரிநாதரின் பெருமைகளைக் குறித்துப் பாடுவது வழக்கம். அதன்படி இறுதிப்பாடலில் அருணகிரிநாதரையும், அவர் அருளிய கந்தரனுபூதியையும் போற்றினார். (30)

**முக்கியமான குறிப்புகள்:**

சுவாமிகள் சண்முக கவசத்தில் முருகனைப் பற்றிய பல நுண்ணிய கருத்துகளையும், அரிய விவரங்களையும், ஆங்காங்கே குறிப்பாகவும் வெளிப்படையாகவும் தெரிவிக்கிறார். ஓர் அடியார் முருகனைப் பற்றி அறிய வேண்டிய அடிப்படைக் கருத்துகள் அனைத்தும் இக்கவச நூலில் வெள்ளிடை மலையாகவும், இலை மறை காயாகவும் பதிந்துள்ளன. அத்தகைய உதிரிப்பூக்களை ஒரு மாலையாகத் தொடுக்கலாம்.

(எண்கள் : கவசப்பாடல்களின் எண்கள்.)

**1. மந்திரங்கள்**

1. சண்முக கவசத்தின் ஒவ்வொரு பாடலும் மகாமந்திரமாகும்.
2. ஓம் சரவண பவ: இதுவே ஆறெழுத்து மூலமந்திரம் (1, 23, 30)
3. ஓம் - ஓங்காரம். பிரணவ மந்திரம். மயில் வாகனன் ஓங்கார வடிவத்தில் திருக்காட்சி தருகின்றான் (28).
4. ஓம் ஐம் ரீம்: இந்த மகாமந்திரத்தின் வடிவில் இருப்பது 'மந்திரவேல்' (21).

**2. குரு**

குரு.கு=அறியாமையை ரு=அகற்றுபவன். உயிர்களின் அஞ்ஞான - அறியாமை இருளை அகற்றும் ஞானவீரன் ( 24 ) முருகன். இவனுடைய வேலும் ஞானவேல் ( 14 ); ஞான சக்தி.

''நேச ஆசான்'' ( 7 ) அகத்தியருக்கும், சிவபெருமானுக்கும் (28), அருணகிரிநாதருக்கும், ( 30 ) சுவாமிகளுக்கும் ( 30), தொண்டர்களுக்கும் (1) குருவாய் வந்து அருளினான்.

வேதங்கள் போற்ற வீற்றிருக்கும் குழகன் ( 2 ) அந்த வேதங்களைக் கற்பிக்கும் குருவாகத் திகழ்கின்றான் (26).

**3. உறவு முறைகள்**

1. முருகனின் தந்தை சிவபெருமான். (7,26)
2. தாய்-உமை (5) (6) 3. தமையன் - விநாயகன் (3)
4. மனைவிகள் - வள்ளி (இச்சாசக்தி); தேவானை (கிரியாசக்தி) (24); மாமனார் - திருமால் (5,25) மாமியார் - இலக்குமி (4).

**4. அவதாரம் சார்ந்த பெயர்கள்**

1. பாவகி - தீப்பொறிகளை உடம்பாகக் கொண்டவன் (15)
2. அங்கி நந்தனன் - தீயின் மகன்(6); 3. காங்கேயன் = கங்கையின் மகன் (7); 4. சானவி முளை = கங்கையின் மகன் 5. சரவணத்தான் (1, 23) சரவண பவன் (30) = சரவணப் பொய்கையில் அவதரித்தவன். 6. கார்த்திகேயன் (2) வாகுலேயன் - வாகுலை = கார்த்திகை; கார்த்திகைப் பெண்களால் போற்றி வளர்க்கப்பட்டவன் ( 4 ) 7. கந்தன்=ஒன்றுபட்டவன்; இணைந்தவன் (6).

**5. இளமைப் பெயர்கள்**

1. சேய் (5); 2. குமரன் (3); 3. குழகன் (28)

**6. குணங்கள் சார்ந்த பெயர்கள்**

1. முருகன் = வீரம், சீற்றம், ஆற்றல், அழகுமிக்கவன் (5), 2. முருகவேள் = விரும்பத்தக்க முருகன் (3), 3. செவ்வேள் = சிவப்பானவன்; குற்றமற்ற கடவுள் ( 1 ) 5. விமலன் விரும்பத்தக்கவன் (3) 4. துகளறு தெய்வம் = குற்றமற்றவன் (9), 6. குகன் = அடியார்களின் மனக்குகையில் வீற்றிருப்பவன் (26) 7. முத்தையன்=முத்தைப் போல வெண்மையானவன்;

தூய்மையானவன்; குளிர்ச்சியானவன. அருமையானவன்; இயற்கை அழகுடையவன். (27)

**7. தலைமையைக் குறிக்கும் பெயர்கள்**

1. ஆதி = அனைத்திற்கும் மூலமானவன்; முதன்மையானவன் (2)
2. ஈசன் = இறைவன்; தலைவன்; சிவன். (1,2,4)
3. சோதி = ஒளி வடிவானவன் (2,9)
4. நாதன் = தலைவன் (2)
5. பிரான் = தலைவன் (19)
6. இறைவன் = எதிலும் மறைவாகத் தங்கி உறைபவன் (7)
7. கயிலைச்செல்வன் = கயிலை மலையில் வீற்றிருப்பவன் சிவன்; முருகன் (2)
8. குறிஞ்சிக்கோன் = குறிஞ்சி நில மன்னன்(4)
9. சுரேசன் = சுரர் + ஈசன் = தேவர்களின் தலைவன் (6)
10. தெய்வம் = அடியார்களின் துன்பங்களையும், தீவினைகளையும் தேய்த்து அழிப்பவன் (1,9)
11. தெய்வ நாயகன் = தெய்வங்களின் தலைவன் (9)
12. கடவுள் =மனம், மொழி, செயல்கள் அனைத்தையும் கடந்த இடத்தில் உள்ளவன்; இயங்கும், இயங்காத அனைத்துப் பொருள்களுக்கும் உள்ளே இருந்து அவற்றைக் கடத்துபவன்; செலுத்துபவன் (30)
13. தே=தெய்வம்; தேவன் (8,29)
14. பரன் = அனைத்திற்கும் மேலானவன்; பரம்பொருள் (9)

**8. வெற்றிகளைக் குறிக்கும் பெயர்கள்**

1. கன்றெறிந்தோன் = கிரௌஞ்ச மலையைத் துளைத்தவன் (17:26) 2. தாரகாரி = சூரபத்மனின் இளைய தம்பியான தாரகாசுரனை வதைத்தவன் (21) 3. சூரசண்டன் = சூரனின் பகைவன் (12); 4. சூர்ப்பகைத்தே = தே = தெய்வம் (29)

**9. முருகனுக்குரியன**

முருகனுக்குரிய திணை 1. குறிஞ்சி (4) 2. வாகனம் = மயில் (6,16,29) 3. கொடி-சேவல் (2) 4. மாலை -கடம்பு (2) 5. நட்சத்திரம் - விசாகம்; (10) கிருத்திகை (4) 6. திதி - சஷ்டி (22)

பன்னிரு ஆயுதங்கள் : 1. கொடி 2. வாள் 3.குலிசம் 4.அம்பு 5.அங்குசம் 6.மணி 7.தாமரை 8.தண்டு 9.வில் 10.மழு 11.தோமரம் 12.வேல் (4)

**10. தோற்றப்பொலிவு**

1.பழைமையான தேவர்கள் வணங்கும் பாதங்களைக் கொண்டவன் (27); 2. சிவந்த திருவடிகளையுடையவன் (7) 3. சிலம்பணிந்தவன் (29); 4.பன்னிரு தோள்களைக் கொண்டவன் (16) 5. ஆறுமுகன் (6); சண்முகன்(9) 7.பன்னிரு கண்களையுடையவன் (23) 8. தெய்வத் திருமுடியைப் புனைந்தவன் (23).

அடியார்கள் முருகனின் பல பெயர்களை அறிய வேண்டும் என்று சுவாமிகள் பெரு விருப்பம் கொண்டவர் ஆவார். ஆகவே, பல காரணங்களால் தோன்றிய முருகனின் பல பெயர்களைக் கவசப்பாடல்களின் இடையிடையே தொடுத்துப் பாடினார்.

ஒருமுறை பயன்படுத்திய முருகனின் பெயரைச் சுவாமிகள் மற்றொரு முறை பயன்படுத்துவதில்லை.

**11. உவமைகள்**

சுவாமிகள் புதுமையான, அருமையான உவமைகள் சிலவற்றை அமைத்தனர்

1. டமருகத்து அடிபோல் நைக்கும் தலையிடி (17) மேலும், தமிழ் எழுத்துகளை உவமைகளாக அடுக்கினார்.

1. ஙகரமே போல் தழீஇ (14)
2. யகரமே போல் சூல் (23)
3. அகரமே முதலாம் ஈராறு அம்பகன் (23)
4. லகரமே போல் காளிங்கன் (25)

இவ்வுவமைகள் முன்னர் விளக்கப் பெற்றன.

**12. சிவனும் முருகனும்**

சிவனின் மகனாகவும், குருவாகவும் விளங்குபவன் முருகன்.

1. சிவனின் மகன்: சிவனின் மகன் முருகன். அரன் மகன் (7) ஈசன் மகன் (26). ஈசன் - சிறப்பாகச் சிவனைக் குறிக்கும் பெயர்.

2. சிவனின் குரு: சிவனின் குரு முருகன். சுவாமி மலையில், முருகன், தன் தந்தையார் சிவனுக்கு ஓம் என்ற பிரணவப் பொருளை விவரித்தான். ஆகவே, சுவாமிகள் முருகனைச் சிவகாமி (28) என்றும் சிவகுரு நாதன் (28) என்றும் சிறப்பித்தார்.

3. குமார சிவன்: சிவனும், முருகனும் ஒருவரே என்பது சான்றோர் பலரின் கருத்தாகும். சிவன் ஐந்து முகங்களைக் கொண்டவன். சிவனே ஆறுமுகங்களுடன் முருகனாகத் தோற்றமளித்தான். சிவனின் மாற்று வடிவமே முருகன்.

ஆகவே, சுவாமிகள் முருகனைக் குமார சிவம் எனக் கருதுவர்; அறுமுகச்சிவன் (28) என்று குறிப்பிடுவர்.

மேலும், சிவனையும், முருகனையும் ஒருங்கே இணைத்துக் கூறும் கவசத் தொடர்கள் சில வருமாறு :

1.ஈசன் ஆன திண்திறல் சரவணத்தான். (1)
2.கயிலைச்செல்வன் (2)
3.தணிகை ஈசன் (2)
4.சிவசுப்ரமணியன் (3)
5.ஈசனாம் வாகுலேயன் (4)
6.சிவசாமி (28) சிவகுருநாதன் (28)

**முடிவுரை:**

இவ்வளவு சிறப்புகள் சண்முக கவசம் பாடலுக்கு உள்ளனவா என்று பாம்பனடிகளே வியந்து போற்றுவார்கள். படித்தால் படித்தவர்கள் நிச்சயம் பயன் பெறுவார்கள். முருகர் அருள் நிச்சயம் கிடைக்கும். எனவே இக்கட்டுரை முழுவதை அச்சிட்டு முருகனடியார்களுக்கு அன்பளிப்பாக வழங்கிப் படிக்க வைக்கலாம் என்பது என் கருத்து.

## குருநாதர் பாம்பன் சுவாமிகளின் திருவாக்கு

- கவசச் செய்யுள்களில் சிலவற்றை விட்டுவிட்டுச் சிலவற்றை மட்டும் கூறுதல் கூடாது.
- இடையில் எவரோடேனும் பேசுதல் கூடாது.
- மந்திரமாறுபாடு ஏற்படக் கூடுமாதலால் கவசச் செய்யுள்களை முன்பின் மாறிமாறிப் படிப்பதையும் தவிர்த்தல் வேண்டும்.
- கவசச் செய்யுள்களைப் படிக்கத் தொடங்கும் முன் பகை கடிதல், குமாரஸ்தவம் ஆகிய இரண்டையும் படித்துவிட்டுத் தொடங்குதலே சிறப்பான பலன்தரும்.
- சத்தியமான பக்தியுடன் பாடினால் சண்முகநாதனின் அருள்கிட்டுவது உறுதி.